இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 436/2022

உத்தரப்பிரதேச மாநில அரசு **மேல்முறையீட்டாளர்**

எதிர்

சுபாஷ் (எ) பப்பூ **எதிர்மேல்முறையீட்டாளர்**

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா

1. அலகாபாத் உயர் நீதிமன்ற அதிகாரவரம்பில் குற்றவியல் மேல்முறையீடு எண் 1462/1985-இல் எதிர்மேல் முறையீட்டாளரான அசல் குற்றவாளியால் முன்கொணரப்பட்ட மேற்சொன்ன மேல்முறையீட்டை அனுமதித்ததன் வாயிலாக இந்திய தண்டனைச் சட்டம் (இ.த.ச) பிரிவு 302 மற்றும் 148-இன் கீழான குற்றங்களுக்காக எதிர்மேல்முறையீட்டாளரை விடுதலை செய்து பிறப்பிக்கப்பட்ட கேள்விக் குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவுடன் மனக்குறையுற்றும், அதிருப்தியடைந்தும் தற்போதைய மேல்முறையீட்டை உத்தரப் பிரதேச மாநில அரசு தாக்கல் செய்துள்ளது.

2. தற்போதைய மேல்முறையீட்டிற்கு வழிகோலுகின்ற சங்கதிகள் மணிச்சுருக்கமாக பின்வருமாறு:

2.1. இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களான சுபாஷ் (எ) பப்பு, பிரமோத், முன்னா லால் மற்றும் முன்தெரியாத மூன்று நபர்களுக்கு எதிராக ஹரி சிங் (அ.சா.5) என்பவர் ஃபிரோசாபாத் (தெற்கு) மாவட்ட காவல் நிலையம், ஆக்ராவில் 4.12.1980 அன்று

மாலை 5.15 மணியளவில் புகார் அளித்தார். அத்தகைய முதல் தகவல் அறிக்கையில் (மு.த.அ) 4.12.1980 அன்று மதியம் 2.00 மணியளவில், சுபாஷ் (எ) பப்பூ, பிரமோத் மற்றும் முன்னாலால் ஆகியோர் முன்தெரியாத மூன்று நபர்களுடனாக கல்லமண்டி ஃபிரோசாபாத்தில் அமையப்பெற்ற ஹரி ஓம் என்பவருடைய கடைக்குள் கம்புகள், ஹாக்கி மட்டைகள் மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களுடன் வந்ததாக சாட்டுரைக்கப்பட்டது. நியாய விலை அட்டை இல்லாமல் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய்யை அவர்களுக்கு வழங்கும்படி அவர்கள் கோரிய நிலையில் கடையில் பணியாளர் என்ற முறையில் இருந்த பெங்காலி (இறந்தவர்) அப்பொருட்களை அவர்களுக்கு வழங்கிட மறுத்தார், அதன்பின் ஆட்களில் ஒருவர் அவரை கத்தியால் குத்தினார். மற்றொருவர் ஹாக்கி மட்டையால் அடித்தார். ஆதலால், பெயரிடப்பட்ட மூன்று குற்றவாளிகள் மற்றும் முன்தெரியாத மூன்று நபர்கள் இ.த.ச., பிரிவுகள் 147, 148, 323, 324-இன் கீழான குற்றங்களை இழைத்ததாக சாட்டுரைக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவரான பெங்காலி, ஆக்ரா எஸ்.என். மருத்துவமனையில் ஆக்ரா கூடுதல் மாநகர நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பு 5.12.1980 அன்று காலை 11.40 மணிக்கு தனது மரண வாக்குமூலத்தை அளித்தார்.அங்கு பாதிக்கப்பட்டவரான பெங்காலி சிகிச்சை பெற்றுவந்தார்.காயமடைந்த பெங்காலி 4.1.1981 அன்று காலமானார்.

2.2 புலன் விசாரணை நிறைவடைந்த பின்னர், மேற்சொன்ன குற்றங்களுக்காக 25.1.1981 அன்று அனைத்து குற்றவாளிகளுக்கும் எதிராக புலனாய்வு அதிகாரி குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தார்.எனினும், மு.த.அ.-இல் பெயரிடப்பட்ட சுபாஷ் (எ) பப்பூ மற்றும் இதர உடன் -எதிரி தலைமறைவானவர்கள்போன்று காண்பிக்கப்பட்டுள்ளனர். அதன்பின்னர் சுபாஷ் (எ) பப்பூ நீதிமன்றம் முன்பு 6.2.1981 அன்று சரணடைந்தார்.

இவ்வழக்கு அமர்வு நீதிமன்றத்தினால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால், ஆக்ரா IV-ஆவது கூடுதல் அமர்வு நீதிபதியின் நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அமர்வு வழக்கு எண் 361/1982 என்று எண்ணிடப்பட்டது. மேற்சொன்ன குற்றங்களுக்காக அனைத்து குற்றவாளிகளும் அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டனர்.

குற்றவாளி சுபாஷ் (எ) பப்பூ இ.த.ச., பிரிவு 302 மற்றும் இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டார். மற்ற உடன்-எதிரிகளான பிரமோத் மற்றும் முன்னாலால் இ.த.ச., பிரிவுகள் 147, 149 மற்றும் 302-இன் கீழான குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டனர். அனைத்து குற்றவாளிகளும் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்று மறுத்துரைத்தும், மேலும் குற்றச்சாட்டுகளையும் மறுத்துரைத்ததால், அவர்கள் விசாரணைக்கு ஆட்படுத்தப்பட்டனர். குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும்பொருட்டு, அரசுத்தரப்பால் 10 சாட்சிகள் அனைவரும் விசாரிக்கப்பட்டது பின்வருமாறு:-

	பெயர்	வாக்குமூலம்
அ.சா .1	மருத்துவர் விஜயகுமார்	இறந்தவர் வங்காளியின் மருத்துவ பரிமறு விசாரணையை நடத்தியது யார்?
அ.சா .2	தலைமை காவலர். திரு.கஜேந்திரா	அ.சா .5 . ஹரிசிங் கூறியது போன்று மு.த.அ. - ஐ எழுதியவர்
அ.சா-3	திரு.வி.என்.சக்ஸேனா	தொழில்நுட்ப பணியாளர், எஸ்.என்.மருத்துவமனை , ஆக்ரா

அ.சா-4	திரு. இராம் ரத்தன் ஓஜா	மருந்தாளுநர் என்.என்.எம் . மருத்துவனை , ஃபிரோசாபாத்
அ.சா-5	ஹரிசிங்	தகவல் அளித்தவர்
அ.சா-6	முன்னா லால்	
அ.சா-7	திரு. போபத் சிங்	
அ.சா-8	மருத்துவர் சுரேந்திர குமார் அகர்வால்	மரண வாக்குமூலம் பதிவு செய்யும் சமயத்தில் பெங்காலி சுயநினைவுடனும் உணர்வு தகுதியுடனும் இருந்தார் என்று சான்றளித்தவர்
அ.சா-9	திரு. யுதிஷ்திர் ஷர்மா	மரண வாக்குமூலத்தை பதிவு செய்த கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்
அ.சா-10	தலைமைக் காவலர் தயாராம்	

2.3. தகவல் அளித்தவரான அ.சா .5 பிறழ்சாட்சியாகி விட்டார். அதன்பின்னர் குற்றவாளியின் வாக்குமூலம் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் (கு.வி.மு.ச) பிரிவு 31-இன் கீழ் பதிவு செய்யப்பட்டது. கு.வி.மு.ச., பிரிவு 31-இன் கீழான வாக்குமூலத்தின் நடுவில் மரண வாக்குமூலத்தில் பப்பூ, த/பெ.பைஜ்நாத் என்ற பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது என்பதும், அவர் சுபாஷ் (எ) பப்பூ ஆவார் என்பதும் குற்றவாளி தரப்பினருடைய வழக்காகும்.எவ்வாறிருப்பினும், கிராமத்தில் பப்பூ, த/பெ.பைஜ்நாத் என்ற பெயர் கொண்ட மற்றொரு நபரும் உள்ளார் என்பது அவருடைய வழக்கல்ல சுபாஷ் (எ) பப்பூ என்பவர் பைஜ்நாத் என்பவருடைய மகன் என்பதை மறுத்துரைப்பதற்கில்லை.

மரண வாக்குமூலத்தை சார்வுற்றதன்பேரில், சுபாஷ் (எ) பப்பூ எனும் குற்றவாளிக்கு விசாரணை நீதிமன்றம் இ.த.ச., பிரிவு 302 மற்றும் 148-இன் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றங்களுக்கான குற்றத்தீர்ப்பை வழங்கியது.எனினும், விசாரணை நீதிமன்றம் பிரமோத் மற்றும் முன்னா லால் ஆகிய குற்றவாளிகளை விடுவித்தது. சுபாஷ் (எ) பப்பூ என்கிற குற்றவாளியைப் பொறுத்தமட்டில், இ.த.ச., பிரிவு 302-இன் கீழாக தண்டிக்கக்கூடிய குற்றத்திற்காக ஆயுள் தண்டனையும் மற்றும் இ.த.ச., பிரிவு 148-இன் கீழாக தண்டிக்கக்கூடிய குற்றங்களுக்காக மூன் ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதித்து விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2.4 சுபாஷ் (எ) பப்பூ என்பவரை குற்றவாளி எனத் தீர்மானித்து விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்புக்கான தீர்ப்புரை மற்றும் உத்தரவுடன் மனக்குறையுற்றும் அதிருப்தியடைந்தும், சுபாஷ் (எ) பப்பூ எனும் குற்றவாளி உயர் நீதிமன்றத்தின் முன்பாக குற்றவியல் மேல்முறை-யீட்டினை தாக்கல் செய்துள்ளார். இறந்தவரின் வயிற்றில் கத்திக்குத்தை ஏற்படுத்தியது யார் என்று மரண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், அதற்குமாறாக பப்பூ, த/பெ.பைஜ்நாத் என்பவர் அவரை ஹாக்கி மட்டையால் தாக்கியதாக கூறப்பட்டுள்ளதை முக்கியமான அடிப்படையாகக்கொண்டு இ.த.ச., பிரிவு 302 அத்துடன் இ.த.ச., பிரிவு 148-இன் கீழாக தண்டிக்கக்கூடிய குற்றங்களை முன்னிட்டு உயர் நீதிமன்றம் சுபாஷ் (எ) பப்பூ என்கிற குற்றவாளியை விடுதலை செய்தது.

எனவே, இறந்தவரின் வயிற்றில் அவர்தான் கத்திக்குத்தை ஏற்படுத்தினார் என்று சுபாஷ் (எ) பப்பூவுக்கு எதிராக சாட்டுரைகள் இல்லாததாலும் மரணமுற்றவரின் வயிற்றில் யார் கத்திகுத்து ஏற்படுத்தினார் என்று விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் இருக்கும் முரண்பாடுகளினாலும், இந்தக் குற்றவாளியை உயர் நீதிமன்றம் விடுதலை செய்தது என்று உயர் நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது.

2.5 உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட கேள்விக்குள்ளான தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையுடன் மனக்குறையுற்றும் அதிருப்தியடைந்தும், தற்போதைய மேல்முறையீட்டினை மாநில அரசு தாக்கல் செய்துள்ளது.

3. மாநில அரசின் சார்பாக ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திருமதி/செல்வி.கரிமா பிரசாத், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளில் இ.த.ச., பிரிவு 302 மற்றும் இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்தை முன்னிட்டு குற்றவாளியை விடுதலை செய்ததில் பெரும் தவறிழைத்துவிட்டது என்று படுமுனைப்புடன் வாதிட்டார்.

3.1 கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் 5.12.1980-ஆம் தேதியிடப்பட்டு பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தில், எதிர்மேல்முறையீட்டாளரான குற்றவாளி மற்றவர்களுடன் இருந்தார் என்ற முறையில் குற்றச்செயலில் முனைப்புடன் பங்குபெற்றார் என்று திட்டவட்டமாக குறிப்பிடப் பட்டுள்ளது என்று மாநில அரசின் சார்பாக ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திருமதி/செல்வி.கரிமா பிரசாத் என்பவரால் மும்முரமாக வாதிடப்பட்டது.எனவே, எதிர்மேல்முறையீட்டாளர் இ.த.ச., பிரிவு 302 உ/இ. இ.த.ச., பிரிவு 149-இன் கீழான குற்றத்திற்கான தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்படலாம் என்று வாதிடப்பட்டது.

3.2. இஃதன்றியும் புகாரில் எதிர்மேல்முறையீட்டாளரான சுபாஷ் (எ) பப்பூ அபாயகரமான ஆயுதமான கத்தியின் மூலமாக தாக்கினார் என்பதால், இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காகவுங்கூட எதிர்மேல்முறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டார் என்று அ.சா.5 துவக்கம் முதலே குறிப்பிட்டு சாட்டுரைத்தார் என்று சமர்ப்பிக்கப்பட்டது.

3.3. எனினும், அதன்பின்னர், அ.சா.5 அசல் புகார்தாரர்/தகவலளித்தவர் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார் என்று சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவர் ஓர் சட்டவிரோதமான கும்பலின் உறுப்பினர் என்றும், பெங்காலியை கொலை (காயப்படுத்துதல்) செய்யவேண்டும் என்று அந்தக் கும்பல் பொது உட்கருத்தை மேற்கொள்கையில் கலகம் விளைவிக்கும் குற்றத்தை புரிந்தனர் என்று அவருக்கெதிராக குறிப்பிட்ட குற்றச்சாட்டு வனையப்பட்டது என்று பணிந் துரைக்கப்பட்டது. ஆகையால், குற்றச்சாட்டு வகையில் தவறான பிரிவு பயன்படுத்தப்பட்டது என்ற காரணத்தினாலும், பிரிவு 149-இன் கீழான குற்றத்திற்காக எதிர்மேல்முறை யீட்டாளரை குறிப்பிட்டு குற்றஞ்சாட்டவில்லை என்பதாலும், அது விசாரணையையும், விசாரணை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றத் தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பையும் செல்லாததாக்காது.

3.4. இறந்த பெங்காலி கத்தி குத்தின் காரணமாக இறந்துபோனார் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலை என்று மேலும் பணிந்துரைக்கப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர் குற்றவாளியான சுபாஷ் (எ) பப்பூ அவரை ஹாக்கி மட்டையால் தாக்கினார் என்று மரண வாக்குமூலத்தில் கூறியிருந்த போதிலும், அத்தகைய வழக்கிலுங்கூட, சட்டவிரோதமான கும்பலின் ஒரு அங்கமாக எதிர்மேல்முறையீட்டாளர் இருப்பதால்,

இறந்த பெங்காலியை கொல்லவேண்டுமென்ற உத்தரப் பிரதேச மாநில அரசு என்கிற வழக்கில் பொதுவான உட்கருத்தை நிறைவேற்றுகையில் இந்தக் குற்றத்தை இழைத்துவிட்டார் என்றபோதிலும், இ.த.ச., பிரிவு 302 உ/ இ. இ.த.ச., பிரிவு 149-இன் கீழான குற்றங்களுக்கு எதிர்மேல்முறையீட்டாளர் தண்டிக்கப்படவேண்டியவராவார்.

3.5. மற்ற இரண்டு உடன்-எதிரிகளை விடுதலை செய்ததன் அடிப்படையில் பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காக எதிர்மேல்முறையீட்டாளரான குற்றவாளியை உயர் நீதிமன்றம் விடுதலை செய்தது என்பதால் ஐந்து நபர்களுக்கும் குறைவாக இருக்கின்ற சட்டவிரோதமான கும்பலில் எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றவாளியான சுபாஷ் (எ) பப்பூ பங்குபெறவில்லை என்று கூறமுடியாது என்று மாநில அரசின் சார்பாக ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திருமதி.செல்வி.பிரசாத் அவர்கள் மேற்கொண்டு வாதிட்டார்.தற்போதைய வழக்கில், மரண வாக்குமூலத்தின்படியுங்கூட குற்றச்செயலில் ஆறிலிருந்து ஏழு நபர்கள் பங்கு பெற்றுள்ளனர்.

ஆகவே, அதன்பின்னர் மூன்று நபர்கள் மட்டுமே குற்றப்பத்திரிக்கையிடப்பட்டு அதிலிருந்து இரண்டு நபர்கள் விடுதலை செய்யப்பட்டதனாலேயே இ.த.ச., பிரிவு 148-இன் வரம்பெல்லையிலிருந்து இவ்வழக்கினை வெளிக்கொணராது என்று வாதுரைக்கப்பட்டது. எனவே, இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காகவுங்கூட எதிர்மேல்முறையீட்டாளரான குற்றவாளியை விடுவித்ததில் உயர் நீதிமன்றம் பெருந்தவறிழைத்துவிட்டது என்று பணிந்துரைக்கப்பட்டது. மேற்கண்ட வாதுரைக்கு ஆதரவாக, ரோஹ்தாஸ்-எதிர் ஹரியானா மாநில அரசு, (2020) 14 ஸ்கேல் 14 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவின் மீது சார்வுறப்பட்டது.

3.6. மரண வாக்குமூலத்தில், பப்பூ, த/பெ.பைஜ்நாத் அவரை ஹாக்கி மட்டையால் தாக்கினார் என்று இறந்தவர் கூறியுள்ளதும் மற்றும் அ.சா .5-ஆல் கொடுக்கப்பட்ட மு.த.அ./புகாரில் எதிர்மேல்முறையீட்டாளரான சுபாஷ் (எ) பப்பூ கத்தி குத்தை ஏற்படுத்தினார் என்று கூறியுள்ளதும் முரண்பட்டுள்ளதன்பேரில், எதிர்மேல்முறையீட்டாளரான குற்றவாளியை விடுதலைசெய்து உயர் நீதிமன்றம் பெருமளவில் தவறிழைத்துவிட்டது என்று மாநில அரசின் சார்பாக ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திருமதி. செல்வி.கரிமா பிரசாத் அடுத்ததாக வாதுரைத்தார்.ஒருமுறை அ.சா .5, தகவல் அளித்தவர் பிறழ்சாட்சி என்று அறிவித்துவிட்டால், மு.த.அ./புகாரில் குறிப்பிடப்பட்ட எதுவும் கருத்திற்கொள்ளப்படக்கூடாது என்று சமர்ப்பிக்கப்பட்டது.எனவே, கிடைக்கப்பெறக்கூடிய ஒரேயொரு சாட்சியத்தின் விளைவான மரண வாக்குமூலத்தில் பப்பூ அவரை ஹாக்கி மட்டையால் தாக்கியதாக குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான கும்பலின் ஒரு அங்கமாக இருப்பதனால் யாரோ ஒருவர் இறந்தவரின் வயிற்றில் கத்திக்குத்தை ஏற்படுத்தினார் என்றும், கத்திக்குத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாக அவர் இறந்துவிட்டார் என்றபோதிலும் இ.த.ச., பிரிவு 302 உ/ இ. பிரிவு 149 அத்துடன் இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காக எதிர்மேல்முறையீட்டாளரான குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டியவராவார் என்று வாதுரைக்கப்பட்டது. விசாரணை நீதிமன்றம் என்ற முறையில் 5.12.1980-ஆம் தேதியிடப்பட்ட மரண வாக்குமூலம் மீது சார்வுற்று பிரிவுகள் 302 மற்றும் 148-இன் கீழான குற்றங்களுக்காக குற்றவாளிக்கு சரியான தண்டனைத் தீர்ப்பு வழங்கியது என்று பணிந்துரைக்கப் பட்டது.

கூடுதல் மாவட்ட போக்குவரத்து அலுவலரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தின் நம்பகத்தன்மையை உயர் நீதிமன்றம் என்ற முறையில் கேள்விக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவில் சந்தேகிக்கவில்லை என்று பணிந்துரைக்கப்பட்டது. ஆகவே, அரசுத்தரப்பினரால் நிலைநாட்டப்பட்டு மெய்ப்பிக்கப்பட்டது எதுவோ அந்த மரண வாக்குமூலத்தின் அடிப்படையில் தண்டனைத் தீர்ப்பு இருக்கக்கூடும் என்று வாதுரைக்கப்பட்டது.

3.7. ஃபைனுள் கான் -எதிர்-ஜார்கண்ட் மாநில அரசு, (2019) 9 எஸ்.சி.சி. 549; அன்னாரெட்டி சாம்பசிவ ரெட்டி-எதிர்-ஆந்திரப் பிரதேச மாநில அரசு (2009) 12 எஸ்.சி.சி .546; அலிஸ்டர் அந்தோணி பெரேரா-எதிர் மஹாராஷ்டிர மாநில அரசு, (2012) 2 எஸ்.சி.சி. 648 மற்றும் ரோஹ்தாஸ் எதிர்-ஹரியானா மாநில அரசு (2020) 14 ஸ்கேல் 14 போன்ற வழக்குகளின் தீர்ப்புரைகளின் மீது சார்வுற்றும் மேற்கண்ட வாதுரைகளை செய்தும் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கேள்விக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவை செல்லாததாக்கி நீக்கறவு செய்து தற்போதைய மேல்முறையீட்டினை அனுமதிக்கும்படி வேண்டுரைத்தனர்.

4. எதிர்மேல்முறையீட்டாளர் குற்றவாளியின் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. தீபக் கோயல் என்பவரால் தற்போதைய மேல்முறையீடு கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டது

4.1.இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, இ.த.ச., பிரிவு 302 மற்றும் இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றங்களுக்காக குற்றவாளியை விடுவித்ததில் உயர் நீதிமன்றம் எந்தத் தவறும் இழைக்க வில்லை என்று குற்றவாளியின் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞரால் கடுமையாக வாதிடப்பட்டது.

மு.த.அ. -இல் சுபாஷ் (எ) பப்பூ கத்திக்குத்தை ஏற்படுத்தினார் என்று சாட்டுரைத்தநிலையிலும், மரண வாக்குமூலத்தில் ஹாக்கி மட்டையால் பப்பூ தாக்கினார் என்று கூறியிருப்பதும், சான்றாதார முரண்பாடுகள் உள்ளது என்பதால், உயர் நீதிமன்றம் குற்றவாளியை விடுவித்தது சரியானதே என்று வாதுரைக்கப்பட்டது.

4.2.உண்மையிலேயே, யார் கத்திக்குத்தை ஏற்படுத்தினார் என்று மரண வாக்குமூலத்திலுங்கூட எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று குற்றவாளியின் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞரால் மேற்கொண்டு வாதிடப்பட்டது.முன்கூறப்பட்டதற்கு முரணாக, ஹாக்கி மட்டையால் பப்பூ தாக்கினார் என்று மரண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறப்பட்டது.ஆகவே, கத்திக்குத்தை ஏற்படுத்தினார் என்று குற்றவாளிக்கு எதிராக குறிப்பிட்ட சாட்டுரைகள் இல்லாதபோதும், இ.த.ச., பிரிவு 149-இன் கீழான குற்றத்திற்காக குற்றவாளி குற்றஞ்சாட்டப்படாததாலும் இ.த.ச., பிரிவு 149-இன் துணைக்கொண்டு பிரிவு 302-இன் கீழான குற்றங்களுக்காக குற்றவாளிக்கு தண்டனைத் தீர்ப்பு விதிக்கமுடியாது.

4.3.மரண வாக்குமூலத்திலுங்கூட கூறப்பட்டது போன்று, இறந்தவரை ஹாக்கி மட்டையால் பப்பூ தாக்கியுள்ளதால், அதனை அபாயகரமான ஆயுதமாக இருக்கக்கூடும் என்று கூறமுடியாது என்றும் மூன்று குற்றவாளிகள் மட்டுமே குற்றப்பத்திரிக்கையிடப்பட்டு /குற்றஞ்சாட்டப்பட்டதிலிருந்து இரு குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்ற சங்கதியைக் கருத்தில் கொண்டதால், இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காக எதிர்மேல்முறையீட்டாளரான குற்றவாளிக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கமுடியாது என்று குற்றவாளியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் மேற்கொண்டு வலியுறுத்தப்பட்டது.

4.4. இல்லையெனிலுங்கூட, மரண வாக்குமூலம் அடுத்த தினமே பதிவு செய்யப்பட்ட நிலையில் அந்தச் சமயம் அவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்ற அளவிற்கு பதிவுருக்களில் எதுவுமில்லை என்ற சங்கதியைப் பரிசீலித்ததில் 5.12.1980 அன்று மரண வாக்குமூலம் பதிவு செய்யவேண்டும் என்பதற்கான அவசியமில்லை என்று எதிரிக்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞரால் மேற்கொண்டு வாதிடப்பட்டது.எனவே, மேற்சொன்ன வாக்குமூலத்தை சார்வுறமுடியாது.மேலும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.இந்தச் சூழமைவில் லஷ்மண்-எதிர் மஹாராஷ்டிர மாநில அரசு, (2002) 6 எஸ்.சி.சி. 710 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவு மீது சார்வுறப்பட்டது.

4.5.இவ்வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளரான குற்றவாளியால் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஹாக்கி மட்டை-ஆயுதம் கைப்பற்றப்படவில்லை என்று குற்றவாளிக்காக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞரால் பணிந்துரைக்கப்பட்டது.

4.6.இல்லையெனிலுங்கூட, தற்போதைய வழக்கில் இறந்தவர் முப்பது நாட்களுக்கு பின்னராக இறந்துள்ளார்.மேலும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும்நிலையில் நச்சுக்குருதி நோயின் காரணமாக அவர் காலமானார் என்பதால் இ.த.ச., பிரிவு 304 பகுதி II-இன் கீழாக இவ்வழக்கு வந்தடையும்.சஞ்சய் -எதிர்-உத்தரப் பிரதேச மாநில அரசு, (2016) 3 எஸ்.சி.சி. 62 என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவின்மீது சார்வுறப்பட்டது.ஆதலால் தண்டனைத் தீர்ப்பினை இ.த.ச., பிரிவு 302-லிருந்து இ.த.ச., பிரிவு 304 பகுதி II-க்கு திருத்தியமைக்கக் கோரி மாற்றுவகையாகவும் வாதிடப்பட்டது.

பதில் மறுப்புரையில், குற்றவாளியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் சார்வுறப்பட்ட (மேற்படி) சஞ்சய் என்ற வழக்கிலுங்கூட தண்டனைத் தீர்ப்பானது இ.த.ச., பிரிவு 304 பகுதி I-ஆக திருத்தியமைக்கப்பட்டது என்று மாநில அரசின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திருமதி/செல்வி.கரிமா பிரசாத் பணிந்துரைத்தார்.

5. தரப்பினர்களுடைய கற்றறிந்த வழக்குரைஞர்கள் முறையே முழுமையாக கேட்டறியப்பட்டனர்.

6. கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் 5.12.1980 அன்று பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தின்படி, ஆறு/ஏழு நபர்கள் மரணமுற்றவரைத் தாக்கியுள்ளனர் என்பது தொடக்கத்திலேயே கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது.ஹரி சிங் (அ.சா .5) என்பவரால் அளிக்கப்பட்ட புகாரிலுங்கூட, தனது தம்பியை ஆறு நபர்கள் ஹாக்கி மட்டை மற்றும் கத்தியால் தாக்கியுள்ளதாக குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.தகவல் அளித்தவரான (அ.சா .5) ஹரி சிங் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார் என்பது உண்மைதான்.எவ்வாறாயினும், அதேசமயத்தில், 5.12.1980 அன்று கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை சந்தேகிப்பதற்கான எந்தக் காரணத்தையும் எங்களால் பார்க்கமுடியவில்லை.

மரண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட நாளில் உச்ச நிலையான உடனடித்தேவை இல்லை என்றும், மற்றும்/அல்லது அவரது நிலை மிகவும் மோசமானதாக இல்லை என்றும் அல்லது அவரது உயிருக்கு எவ்வித ஆபத்தும் இல்லை என்பதுபோன்ற காரணம் இல்லாமலும் மற்றும்/அல்லது மரண வாக்குமூலத்தை பதிவுசெய்யும்படி செய்வித்ததாலும், மரண வாக்குமூலமானது நம்பிக்கைக்குரிய வகையில் இல்லை என்பதில் எவ்வித சாராம்சமும் இல்லை.

ஒரு வழக்கில் எவ்வித உடனடித்தேவையோ மற்றும்/அல்லது உயிருக்கு ஆபத்தான நிலைமையோ இல்லை என்ற சமயத்தின்போது, மரண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்பதையடுத்து, அந்த மரண வாக்குமூலம் முழுவதுமாக நிராகரிக்கப்படவேண்டும் என்ற இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட தெளிவான சட்ட அறுதியுரை இல்லை என்ற (மேற்படி) லஷ்மண் வழக்கின் மீது குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் சார்வுறப்பட்டது.

தற்போதைய வழக்கில், இறந்தவர் கத்திக்குத்து காயத்தை கொண்டிருந்தார் என்பதால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட சாத்தியங்கள் உள்ளன என்பதால், செயலறிவின் மூலமாக, 5.12.1980 அன்று மரண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருப்பின், கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் பதிவு செய்யப்பட்ட அந்த மரண வாக்கு மூலத்தை சந்தேகிப்பதற்கான காரணம் எதுவும் இல்லை.எனவே, எங்களது கருத்துநிலையின்படி 5.12.1980 அன்று கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் பதிவு செய்யப்பட்ட மரண வாக்குமூலத்தை விசாரணை நீதிமன்றம் சரியாக சார்வுற்றது மற்றும்/அல்லது நம்பியுள்ளது.

6.1. பப்பூ, த/பெ.பைஜ்நாத் உள்ளடங்கலாக இறந்தவரை ஆறு முதல் ஏழு நபர்கள் வரை தாக்கியுள்ளார்கள் என்பது மரண வாக்குமூலத்திலிருந்து வெளிப்படுகிறது.எனவே, மரண வாக்குமூலத்தை ஆதாரமாகக்கொண்டு சம்பவ சமயத்தில் சுபாஷ் (எ) பப்பூ, த/பெ.பைஜ்நாத் இருந்தார் என்றும், அவர் சட்டவிரோதமான கும்பலின் ஒரு பிரிவினர் என்பதால் குற்ற நிகழ்வில் அவர் பங்கு பெற்றுள்ளார் என்பதையும் மெய்ப்பித்து நிலைநாட்டியதில் அரசுத்தரப்பினர் வெற்றிகண்டனர்.

7. குற்றச்சாட்டு வனைகையில், இ.த.ச., பிரிவு 302 உ/இ. பிரிவு 149-இன் கீழான குற்றங்களுக்காக எதிர்மேல்முறையீட்டாளர் குற்றவாளி எனக் குறிப்பிட்டு குற்றஞ்சாட்டப்படவில்லை என்பது உண்மைதான். குற்றஞ்சாட்டப்பட்டவர், வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் பெங்காலியின் மரணத்தை ஏற்படுத்தவேண்டுமென்று கொலை செய்துள்ளார் என்றும் அதன்படி இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றத்தைப் புரிந்துள்ளார் என்றும் குற்றச்சாட்டு வனைகையில் விசாரணை நீதிமன்றம் குறிப்பாக கவனித்தது என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.(06.10.1983 அன்று வனையப்பட்ட குற்றச்சாட்டினை காண்க)

குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் பலர் சட்டவிரோதமான கும்பலின் உறுப்பினர்கள் என்றும், அந்தக் கும்பலின் பொது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அதாவது, பெங்காலியைக் கொலை செய்யும்பொருட்டு, அபாயகரமான ஆயுதத்துடன் கலகம் விளைவிக்கும் குற்றத்தைப் புரிந்துள்ளார், அதாவது பெங்காலியைக் கத்தியால் குத்தியதன் மூலம் இ.த.ச., பிரிவு 148-இன் கீழாக தண்டிக்கக்கூடிய குற்றத்தை இழைத்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டு 4.5.1983-ஆம் தேதியிடப்பட்டு வனையப் பட்டதன்வாயிலாக, இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காகவுங்கூட எதிர் மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்று பதிவுருக்களிலிருந்தும் வெளிப்படுகிறது. குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு எதிராக 4.5.1983 மற்றும் 6.10.1983 அன்று வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:

" X-ஆவது கூடுதல் அமர்வு நீதிபதி, ஆக்ரா நீதிமன்றம், அ.வ. எண் 361/1982

குற்றச்சாட்டு

நான், கங்கூராம், X-ஆவது கூடுதல் அமர்வு நீதிபதி, ஆக்ரா, சுபாஷ் சந்த் (எ) பப்பூ ஆகிய உம்மீது இதன்படி குற்றஞ்சாட்டுவது பின்வருமாறு

முதலாவதாக:- தாங்கள் சட்டவிரோதமான கும்பலின் ஒரு உறுப்பினராக இருந்து தெற்கு ஃபிரோசாபாத் போலிஸ் சர்கிள் காவல்நிலையத்திற்குள்ளாக கல்லே கி மண்டியில் 4.12.1980 அன்று மாலை 3.00 மணிக்கு பெங்காலியைக் கொலை (காயப்படுத்துதல்) செய்யும் பொருட்டு அந்தக் கும்பலின் பொது நோக்கத்தை நிறைவேற்றுகையில் பெங்காலியைக் குத்துவதற்காக அபாயகரமான ஆயுதமான கத்தியுடன் கலகம் விளைவித்த குற்றத்தைப் புரிந்துள்ளதனால் இந்நீதிமன்றத்தின் ஆள்வரைக்குட்பட்டு இ.த.ச., பிரிவு 148-இன் கீழாக தண்டிக்கக்கூடிய குற்றத்தினை இழைத்துள்ளீர்.

மேற்சொன்ன குற்றச்சாட்டின்போரில் தாங்கள் இந்நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்படுவீர் என இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

X-ஆவது கூடுதல் மாவட்ட நீதிபதி, ஆக்ரா

1983-ஆம் ஆண்டு மே மாதம் 4-ஆம் தேதியிடப்பட்டது.

குற்றச்சாட்டு ஹிந்தியில் வாசித்து விளக்கிக் கூறப்பட்டது.குற்றஞ்சாட்டப்பட்டவர் விசாரிக்க வேண்டிய குற்றவாளியென்று ஒப்புக்கொள்ளவில்லை.

X-ஆவது கூடுதல் மாவட்ட நீதிபதி, ஆக்ரா

1983-ஆம் ஆண்டு மே மாதம் 4-ஆம் தேதியிடப்பட்டது

IX-ஆவது கூடுதல் அமர்வு நீதிபதி, ஆக்ரா நீதிமன்றம் அ.வ. எண் 361/82

ஜி.எல். குப்தா ஆகிய நான் சுபாஷ் (எ) பப்பூ ஆகிய உம்மீது இதன்மூலம் குற்றம் சுமத்துவது பின்வருமாறு:

தாங்கள் 4.12.1980 அன்று மாலை 3.00 மணியளவில் ஆக்ரா, ஃபிரோசாபாத் தெற்கு மாவட்டம் போலிஸ் சர்கிள் காவல்நிலையத்திற்குள்ளாக ஃபிரோசாபாத் நகரத்தில் உள்ள மோஹல்லா கல்லே கி மண்டியில் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் பெங்காலியின் மரணத்தை ஏற்படுத்தவேண்டுமென்று கொலை செய்ததன்மூலம் இந்நீதிமன்றத்தின் ஆள்வரைக்குட்பட்டு இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றத்தை இழைத்துள்ளீர். மேற்சொன்ன குற்றச்சாட்டின்பேரில் தாங்கள் இந்நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்படுவீர் என இதன்மூலம் உத்தரவிடப் படுகிறது.1983-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6-ஆம் தேதியிடப்பட்டது.IX-ஆவது கூடுதல் அமர்வு நீதிபதி, ஆக்ரா.குற்றச்சாட்டு (ஹிந்தியில்) வாசிக்கப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விளக்கிக் கூறப்பட்டது.அவர் விசாரிக்கப்படவேண்டிய குற்றவாளியென்று ஒப்புக்கொள்ளவில்லை.IX-ஆவது கூடுதல் அமர்வு நீதிபதி."

7.1.வனையப்பட்ட மேற்சொன்ன குற்றச்சாட்டுகளில் இருந்து இ.த.ச., பிரிவு 148 மற்றும் பிரிவு 302 உ/ இ பிரிவு 149-இன் கீழான குற்றங்களின் உட்கூறுகள் குறிப்பாக குற்றஞ்சாட்டப்பட்டவரின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப் பட்டது என்று நிச்சயமாக சொல்லலாம்.

எனவே, இ.த.ச., பிரிவு 149-இன் கீழ் குறிப்பிட்டு குற்றஞ்சாட்டப்படாததன்மூலம் குறைபாடுடன் வனையப்பட்ட குற்றச்சாட்டு என்று மிகவும் அதிகப்படியாகவே கூறமுடியும்.ஆதலால் தற்போதைய வழக்கில் கு.வி.மு.ச., பிரிவு 464 ஈர்க்கப்படுகிறது.கு.வி.மு.ச., பிரிவு 464 பின்வருமாறு:

> ' '464. குற்றச்சாட்டை வனையத் தவறியதால் அல்லது குற்றச்சாட்டு இல்லாமையால் அல்லது குற்றச்சாட்டிலுள்ள பிழையால் ஏற்படும் விளைவு. (1) குற்றச்சாட்டு வனையப்படவில்லை என்ற காரணத்தின்பேரில் மட்டுமோ அல்லது குற்றச் சாட்டுகளை தவறாக சேர்த்தல் உள்ளடங்கலாக குற்றச்சாட்டில் பிழைவிடுதல் அல்லது முறைகேடு ஏதேனும் இருக்கிறது என்னும் காரணத்தின் பேரில் மட்டுமோ மேல்முறையீட்டு உறுதிப்பாட்டு அல்லது சீராய்வு நீதிமன்றத்தின் கருத்துப்படி அதன் காரணமாக உண்மையிலேயே நீதி தவறியிருந்தாலன்றி, அதிகாரத் தகுதிவாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் முடிவு, தண்டனை அல்லது கட்டளை எதுவும் செல்லுபடியற்றதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.
>
> (2) உண்மையிலேயே நீதி தவறியிருக்கிறது என்று மேல்முறையீட்டு உறுதிபாட்டு அல்லது சீராய்வு நீதிமன்றம் கருதுமானால், அது-
>
> (அ) குற்றச்சாட்டொன்று வனையாமல் விடப்பட்டு இருந்தால், குற்றச்சாட்டொன்று வனையப்பட வேண்டும் என்றும், அக்குற்றச்சாட்டை வனைந்த கட்டத்திலிருந்து உடனடியாக விசாரணை மீண்டும் துவக்கப்படவேண்டும் என்றும், கட்டளையிடலாம்.

ஆ குற்றச்சாட்டில் பிழை, விடுதல் அல்லது முறைகேடு ஏதேனுமிருக்கும்போது, தான் பொருத்தமென நினைக்கும் எந்த முறையிலும் வனையப்பட்ட குற்றச்சாட்டு ஒன்றின்பேரில், புதிய விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவிடலாம்.இருப்பினும், மெய்ப்பிக்கப்பட்ட பொருண்மையைப்பொறுத்து, எதிரிக்கு விரோதமாக செல்லுபடியாகும் குற்றச்சாட்டு எதையும் காட்டமுடியாதபடி வழக்கின் நிகழ்மைகள் இருக்கின்றன என்று நீதிமன்றம் கருதுமானால், அது தண்டனைத் தீர்ப்பை செல்லாததாக்கவேண்டும்."

7.2. கு.வி.மு.ச., பிரிவு 464- ஐ பொருள்கொள்கையில், ஒரு குற்றச்சாட்டு வனையும்போது பிழை அல்லது விடுதல்போன்ற நேர்வுகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதித் தவறுகை/அதனால் ஏற்படும் பாதிப்பை காண்பிக்கவேண்டும் என்று (மேற்கண்ட) ஃபைனுள்கான் என்ற வழக்கில் கூர்ந்து ஆராய்ந்து தீர்மானித்தது.

7.3.(மேற்கண்ட) அன்னாரெட்டி சாம்பசிவ ரெட்டி வழக்கில் பிரிவு 149-இன் கீழ் குறிப்பிட்ட குற்றச்சாட்டு இல்லாதபோது, பிரிவு 149 தனிப்பட்ட மற்றும் வேறுபட்ட குற்றத்தினை ஏற்படுத்துகிறது என்பதால் பிரிவு 302 உ/ இ. பிரிவு 149-இன் கீழாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கமுடியாது என்று குற்றஞ்சாட்டப் பட்டவரின் சார்பாக பணிந்துரைக்கப்பட்டது.

மேற்சொன்ன கூற்றினை இந்நீதிமன்றம் எதிர்மறையாக்கி மேல்முறையீட்டாளருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனையப்பட்டிருந்த போதிலும் பிரிவு 149-இன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட வில்லையென்பதால் அவர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிராதபோது தண்டனைத் தீர்ப்பினை செல்லாத தாக்காது என்று கூர்ந்து ஆராய்ந்து தீர்மானித்தது.கு.வி.மு.ச., பிரிவு 464- ஐ கருத்திற்கொண்டு கூர்ந்து கவனித்து தீர்மானிக்கப்பட்டதாவது, வரம்புரையாக குற்றம் சாட்டப்பட்டவருக்கு அதனால் பாதிப்பு ஏற்படவில்லை என்றால், வெறும் மொழிநடையிலோ அல்லது எடுத்துரைப்பதிலோ அல்லது குற்றச்சாட்டு வடிவிலோ இருக்கின்ற குறைபாடு தண்டனைத் தண்டனைத் தீர்ப்பினை ஏற்றுக்கொள்ளத்தகாததாக்க முடியாது.வனையப்பட்ட குற்றச்சாட்டில் இப்பிரிவின் உட்கூறுகள் தெளிவாகவும் அல்லது உள்ளடக்கமாகவும் இருக்குமாயின் மேற்சொன்ன பிரிவு குறிப்பிடப்படவில்லை என்ற சங்கதியைப் பொருட்படுத்தாது, அப்பொழுதிருந்தே அதனுடன் தொடர்பான தண்டனைத் தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்படும்.

8. கைவசமுள்ள வழக்கின் சங்கதிகளுக்குவேண்டி மேற்சொன்ன தீர்முடிவுகளின் உள்ளே இந்நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட சட்டத்தை பொருத்திப்பார்க்கையில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக 4.5.1983 அன்றும் 6.10.1983 அன்றும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளின் உள்ளடக்கங்களை குறித்துக்கொண்டதன்பேரில் இ.த.ச., பிரிவு 149-இன் உட்கூறுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதை காண்பிக்கிறது.எனவே, குற்றச்சாட்டில் இ.த.ச., பிரிவு 149 குறிப்பிடப்படாததன் காரணமாக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தீங்கிழைக்கப்பட்டதாக கூறிவிடமுடியாது.

9. இப்போது, குற்றஞ்சாட்டப்பட்டவரால் பயன்படுத்தியதாக கூறப்படும் ஹாக்கிமட்டை-ஆயுதம் கைப்பற்றப்படவில்லை என்பதால் குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி எனத் தீர்மானிக்கமுடியாது என்று குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பாக வாதுரைக்கப்பட்டதை பொறுத்தமட்டில், மேற்கூறியவற்றில் எந்தப் பொருட்கூறும் இல்லை.பயன்படுத்தப்பட்ட ஆயுதம் கைப்பற்றப்படவில்லை என்ற காரணத்தினால், செயலாட்சி நடுவர் முன்பாக பதிவு செய்யப்பட்டு, அரசுத் தரப்பால் நிரூபிக்கப்பட்ட மரண வாக்குமூலத்தின் மீது சார்வுறக்கூடாது என்பதற்கு அடிப்படையாக இருக்கமுடியாது.

10. இப்போது, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இ.த.ச., பிரிவு 149-இன் துணைகொண்டு பிரிவு 302-இன் கீழாக தண்டிக்கப்படக்கூடிய குற்றத்திற்காக தண்டனைத் தீர்ப்பு வழங்கமுடியுமா?என்ற ஐயப்பாட்டைப் பொறுத்தமட்டில், உண்மையிலேயே யார் கத்தியால் குத்தி தாக்கினர் என்பதை அரசுத் தரப்பில் நிலைநிறுத்தி மெய்ப்பிக்கவில்லை என்பது உண்மைதான்.எவ்வாறாயினும், குற்ற நிகழ்வில் பங்குபெற்ற ஆறு முதல் ஏழு நபர்களில் ஒருவரின் மூலமாக தாக்கப்பட்டு, கத்திக்குத்தின் மூலமாக இறந்தவர் காயம் அடைந்தார் என்பதை மருத்துவ சான்றாதார பதிவேட்டிலிருந்தும் மற்றும் மருத்துவர்களின் வாக்குமூலங்களிலிருந்துங்கூட அரசுத் தரப்பினரால் நிலைநாட்டப்பட்டு மெய்ப்பிக்கப்பட்டது.

குற்ற நிகழ்வில் பங்கேற்றவரான எதிர்மேல் முறையீட்டாளர் - குற்றஞ்சாட்டப்பட்டவரான சுபாஷ் (எ) பப்பூ சட்ட விரோதமான கும்பலின் ஒரு பிரிவினர் என்பது மரண வாக்குமூலத்திலிருந்து நிலைநிறுத்தப்பட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளரான பப்பூ, த/பெ.பைஜ்நாத் என்பவரின் பெயர் மரணமுற்றவரால் மரண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

ஆகவே, மரணமுற்றவரை ஹாக்கி மட்டையால் தாக்கியதே எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றப் பங்காக இருந்தாலும் அத்தகைய நேர்விலுங்கூட கத்திக்குத்து ஏற்படுத்திய சட்டவிரோத கும்பலில் இருந்த மற்ற நபர்களின் செயலுக்காக எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவர் மரணமுற்ற பெங்காலியை கொலைசெய்ததற்காக இ.த.ச., பிரிவு 149-இன் துணைகொண்டு குற்றவாளி எனத் தீர்மானிக்கப்படமுடியும்.

11. மரணமுற்றவர் முப்பது நாட்களுக்குப் பின்னர் நச்சுக்குருதி நோயின் காரணமாக இறந்திருக்கும்பட்சத்தில் இ.த.ச., பிரிவு 149 உ/ இ. இ.த.ச., பிரிவு 302-இன் கீழாக தண்டிக்கக்கூடிய குற்றத்திற்காக எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்க முடியுமா? என்பதை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்காக இந்தச் சூழ்நிலையில் இருக்கின்ற அடுத்த கேள்வியாகும்.

11.1.**(மேற்கண்ட) சஞ்சய் வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவை ஆழ்ந்து ஆராய்கையில், இ.த.ச., பிரிவு** 149 **உ/ இ. பிரிவு** 302**-இன் கீழ் தண்டிக்கக் கூடிய குற்றத்திற்காக எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவரின் தண்டனைத் தீர்ப்பு வழங்கலாம் என்று உறுதியளிக்கவில்லை என்பதால் இவ்வழக்கு இ.த.ச., பிரிவு** 304**, பகுதி** I**-க்குள்ளாக வந்துசேரும்.**

12. இந்தச் சூழ்நிலையில், இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காக எதிர் மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவரின் தண்டனைத் தீர்ப்பைப் பொறுத்த வரையில், இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளில், குற்றஞ்சாட்டப்பட்டு/குற்றப் பத்திரிக்கையிடப்பட்டு/விசாரிக்கப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை ஐந்துக்கும் குறைவாக இருப்பதால் பிரிவு 148 ஈர்க்கப்படமாட்டாது என்பதும்,

அவற்றுள் எந்த சாரமும் இல்லை என்பதுமே எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பான வழக்காகும்.

மரணமடைந்தவரை ஆறிலிருந்து ஏழு நபர்கள் வரை தாக்கியுள்ளனர் என்று ஆரம்பத்திலிருந்தும் அதுபோலவே மரண வாக்குமூலத்திலுங்கூட கூறப்பட்டுள்ளதைக் கவனத்திற்கொள்ளவேண்டும்.எனவே, குற்ற நிகழ்வில் ஆறு முதல் ஏழு வரையிலான நபர்கள் தொடர்புபட்டிருப்பதை மெய்ப்பித்து நிலைநிறுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் வெறும் மூன்று நபர்கள் மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டு/குற்றப்பத்திரிக்கையிடப்பட்டு/ விசாரிக்கப்பட்டதில் இரண்டு நபர்கள் விடுதலைப்பெற்றதால் இ.த.ச., பிரிவு 148-இன் கீழ் எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனைத் தீர்ப்பு விதிக்கமுடியாது என்பது அடிப்படைக் காரணமாக இருக்கமுடியாது.

12.1.எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப் பட்டவரால் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகின்ற ஆயுதம் ஹாக்கி மட்டை என்று சொல்லப்படுகிறது எதுவோ அது அபாயகரமான ஆயுதம் என்று கூறிவிடமுடியாது என்பதால் பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காக எதிர்மேல்முறை யீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டிக்கமுடியாது என்பதிலுங்கூட எந்த சாரமும் இல்லை என்று குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பாக வாதுரைக்கப்பட்டது. இ.த.ச., பிரிவு 148-இன்படி அபாயகரமான ஓர் ஆயுதத்தை அல்லது குற்றத்தைச் செய்ய ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டால் மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய எதையேனும் தாங்கி கலகம் விளைவித்த குற்றத்தை செய்கிற எவரொருவரையும் அந்தப் பிரிவின் கீழாக தண்டிக்கவேண்டும்.இ.த.ச., பிரிவு 146-இன் கீழ் "கலகம் விளைவித்தல் " எனும் வாசகம் வரையறுக்கப்பட்டுள்ளது.

பிரிவு 146-இன்படி ஒரு சட்டவிரோதமான கும்பலால் அல்லது அதனுடைய உறுப்பினர் எவராலேனும் அத்தகைய கும்பலின் பொதுவான நோக்கத்தை நிறைவேற்றுகையில் சக்தியை அல்லது வன்செயலைப் பயன்படுத்தும்போதெல்லாம் அத்தகைய கும்பலின் ஒவ்வொரு உறுப்பினரும் கலகம் விளைவித்த குற்றத்தைச் செய்தவராவார்.தற்போதைய வழக்கில், ஆறு முதல் ஏழு வரையிலான நபர்கள் சட்டவிரோத கும்பலின் ஒரு பிரிவினர் என்றும் அவர்கள் வன்செயல் மற்றும் சக்தியைப் பயன்படுத்தினர் என்றும், அவர்களில் ஒருவர் அபாயகரமான ஆயுதமான, அதாவது, கத்தியைப் பயன்படுத்தினார் என்பதால், சட்டவிரோதமான .கும்பலின் ஒரு உறுப்பினராக இருப்பதினால், எதிர்மேல் முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டவிரோதமான கும்பலின் ஒரு உறுப்பினர் என்ற முறையில் வன்செயல்/சக்தியைப் பயன்படுத்தியதற்காகவும் மற்றும் கலகம் விளைவித்த குற்றத்திற்காகவும் தண்டிக்கப்படக்கூடும்.எனவே, எதிர்மேல்முறையீட்டாளருக்கு இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காக விசாரணை நீதிமன்றம் சரியான தண்டனைத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

13. மேற்கூறப்பட்ட காரணங்களுக்காகவும் மேற்கண்டதன்பொருட்டும், தற்போதைய மேல்முறையீடு பகுதியாக வெற்றி காண்கிறது.குற்றஞ்சாட்டப்பட்டவரை இ.த.ச., பிரிவு 302-இன் கீழாக தண்டிக்கக்கூடிய குற்றத்திற்காக விடுதலைசெய்து உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கேள்விக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவை இதன்படி செல்லாததாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படுகிறது.

எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப் பட்டவர் இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காகவும் இ.த.ச., பிரிவு 149 உ/ இ. பிரிவு 304, பகுதி I-இன் கீழான குற்றத்திற்காகவும் குற்றவாளியென்று தீர்மானிக்கப் படுகிறது. எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப்பட்டவர் இ.த.ச., பிரிவு 149 உ/இ. பிரிவு 304, பகுதி I-இன் கீழாக தண்டிக்கக்கூடிய குற்றத்திற்காக பத்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் ரூ .5,000/-அபராதமும் விதித்து, தவறும்பட்சத்தில் மேற்கொண்டு ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் எதிர்மேல்முறையீட்டாளரான குற்றஞ்சாட்டப் பட்டவர் ரூ.5,000/- அபராதத்துடனாக இ.த.ச., பிரிவு 148-இன் கீழான குற்றத்திற்காக மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அனுபவிக்கும் படியும், தவறும்பட்சத்தில் மேற்கொண்டு இரண்டு மாதங்கள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்படுகிறது.

இவ்விரண்டு தண்டனைகளையும் ஏக காலத்தில் அனுபவிக்கும்படி உத்தரவிடப்படுகிறது. தற்போதைய தீர்ப்புரை மற்றும் உத்தரவின்படி தண்டனைத் தீர்ப்பின் எஞ்சியுள்ள பகுதியை அனுபவிப்பதற்கு நான்குவார காலத்திற்குள்ளாக எதிர்மேல்முறையீட்டாளர் சரணடைய வேண்டும்,

மேற்கூறிய அளவிற்கு மட்டுமே ணங்க தற்போதைய மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.எவ்வாறாயினும், இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளில், செலவுத்தொகை குறித்த உத்தரவு ஏதுமில்லை.

விண்ணப்பங்கள் ஏதேனும் நிலுவையில் இருந்தாலும்கூட தீர்வு செய்யப்படுகிறது,

தண்டனை மாற்றியமைக்கப்பட்டு மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது,

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா
மாண்புமிகு நீதியரசர் திரு. பி.வி. நாகரத்னா

புதுதில்லி
01.04.2022

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்க்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றம் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "